திரு. மீ. கலியாணசுந்தரம்: இப்போது ஆலோசனையில் இருக்கிற பைலட் திட்டத்தினுடைய விவரங்கள் என்ன? இதற்கு என்ன செலவு ஆகும்? எந்த இடத்தில் முதலில் பரிட்சார்த்தமாக வைக்கப்படும்? என்று அறியலாமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: சேலத்தில் இப்போது இருக்கிற சவ்வரிசித் தொழிற்சாலைக்குப் பக்கத்தில் வைப்பதாக உத்தேசம். அதற்கு நான்-ரெக்கரிங் எக்ஸ்பென்டிச்சர் 30,000 ரூபாய், ரெக்கரிங் எக்ஸ்பென்டிச்சர் 40,000 ரூபாய் ஆகும்.

Plants for milk products

* 433 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to set up plants for the manufacture of milk products including Baby-food in the State in private or public sector; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) A scheme for the establishment of a factory for the manufacture of infant and invalid foods at Ootacamund has been under consideration of the Government and it is still in the initial stages.

A private party also has come forward with a proposal to establish a dairy-*cum*-factory for the manufacture of baby food, skim milk powder, cheese and butter at Gudalur taluk and his scheme is under examination.

திரு. வை. சங்கரன்: ஸார், சர்க்கார் துறையில் ஆரம்பிக்கப்படுவதாக இருந்தால் அதன் அளவு எவ்வளவாக இருக்கும்? உற்பத்தி எந்த அளவில் இருக்கும்? தனியார் துறையில் ஆரம்பிக்கப்படுவதாக இருந்தால் எந்த அளவாக இருக்கும்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இதெல்லாம் 'இனிஷியல் ஸ்டேஜஸ்' என்று சொன்னேன்; முடிவு செய்யப்படவில்லை. காரணம் என்ன என்றால், 10,000 லிட்டர் பால் கிடைத்தால்தான் இந்தத் தொழிற்சாலை வைக்க முடியும்.

திரு. வை. சங்கரன்: இது ஆரம்பிக்கப்படுவதாக இருந்தால் எப்போது முடிவு எடுத்து ஆரம்பிக்கப்படும்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: முடிவு எடுப்பது ஒன்றும் இல்லை. 10,000 லிட்டர் பால் கிடைக்கும் வசதி ஏற்பட்டவுடன் இதை ஏற்படுத்தலாம்.

திரு. இரா. நெடுஞ்செழியன்: அவைத் தலைவர் அவர்களே, 10,000 லிட்டர் பால் கிடைக்கும் இடத்தில் வைக்கப்படக் கூடும் என்று தெரிவித்தார்கள். இப்போது இருக்கும் நிலையில் எந்தப் பகுதி அதற்குச் சாதகமாக இருக்கும் என்று அறியலாமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: ஒரு நபர் கூடலூரில் வைக்க முடியும் என்று எழுதியிருக்கிறார். அது சர்க்காருடைய பரிசீலனையில் இருக்கிறது.

5th November 1966]

திரு. வை. சங்கரன் : ஸார், நம் மாநிலத்தில் இந்தப் பால் பண்ணைத் தொழிற்சாலையை வைப்பதில், பால் கிடைப்பதில் லீன் பீரியட், சர்ப்ளஸ் பீரியட் என்று இருக்கின்றன ; சர்ப்ளஸ் பீரியட்டில் கிடைக்கக் கூடிய பாலை வைத்துத் தொழிற்சாலை நடத்தும் முறையில் அது போன்ற திட்டமாவது தயாரிக்கப் படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது நிபுணர்களுக்குத் தெரியும். லீன் பீரியட்டில் சர்ப்ளஸ் பீரியட் பாலை வைத்துக் கொண்டு உபயோகிக்க முடியும் என்று அவர்களுக்குத் தெரியும். பத்தாயிரம் லிட்டர் சர்ப்ளஸ் பீரியட்டிலேயே கிடைக்கும் இடம் தமிழ் நாட்டில் இல்லை.

திரு. டி. கார்ச்சா கவுடர் : சபாநாயகர் அவர்களே, விண்ணப் பித்திருக்கும் தனியார், பண்ணை நடத்தித் தானே பாலை உற்பத்தி செய்துகொள்ளத் தயாராக இருக்கிறார். அவருக்கு உடனடியாக லைஸென்ஸ் கொடுத்து, பின் தங்கியிருக்கும் கூடலூரை முன்னுக்குக் கொண்டுவர அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தனியார்தான் முன் வர வேண்டும். நாங்கள் உதவி கொடுக்கத் தயாராக இருக்கிறோம்.

Inventions promotion

* 434 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state whether the Government have any proposal to provide fillip to those who evolve import substitutes and improved techniques in industry, by presenting them with suitable awards?

THE HON. SRI R. VENKATARAMAN : The State Government do not have any such proposal. But the Inventions Promotion Board organised by the Government of India, afford financial assistance in the form of grants or monetary awards to deserving cases.

திரு. வை. சங்கரன் : ஸார், மத்திய அரசாங்கத்தைப் பின்பற்றி நாமும் இதுபோன்ற ஊக்கமளிக்கும் நடவடிக்கையை எடுத்துக் கொள்ள முடியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது ட்யூப்ளிகேஷன் ஆஃப் எஃபர்ட் ஆகும்.

Manufacture of asbestos

* 435 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state the number and details of existing plants and the plants proposed to be set up in the State, for the manufacture of asbestos-sheets and other asbestos based products like asbestos textile yarns, packing cloth, mill board and jointing sheets?

THE HON. SRI R. VENKATARAMAN : Messrs. Asbestos Cement, Ltd. at Podanur is under production, with an annual capacity of 36,455 tonnes of asbestos sheets and pipes.